செய்தி வெளியீடு எண்.592 நாள். 19.9.2007

## செய்தி வெளியீடு

உச்ச நீதி மன்ற முன்னாள் நீதிபதி திரு. ரெத்தினவேல் பாண்டியன் அவர்கள் தலைமையில் ஏற்கனவே இந்த ஆட்சியில் தென் மாவட்டங்களில் தொழில் வளம் பெருக வேண்டும் என்பதற்காகவும், அந்தப் பகுதிகளிலே வாழ்கின்ற மக்களுக்கு பயன்படும் வகையில் முற்போக்கான திட்டங்களை நிறைவேற்ற வேண்டுமென்பதற்காகவும் குழு அமைக்கப்பட்டு, அந்தக் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் மத்தியிலே அமைச்சராக இருந்த திரு. முரசொலி மாறன் அவர்களின் பெருமுயற்சிகளின் காரணமாக நாங்குநேரியில் மிகப் பெரிய சிறப்பு பொருளாதார பூங்கா ஒன்றினை அமைக்கத் திட்டமிட்டு அதற்கான அடிக்கல் நாட்டு விழாவும் நடைபெற்றது. அதன் பின்னர் வந்த ஆட்சியில் அந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக ஏற்பாடுகள் முறையாகச் செய்யப்படவில்லை. எனவே தி.மு.கழக ஆட்சி 2006இல் மீண்டும் அமைந்த பிறகு, நாங்குனேரியில் சிறப்புப் பொருளாதார மையத்தைத் தொடங்குவதற்கான முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டு, அதன் காரணமாக இடம் கையகப்படுத்துவதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.

எனவே விரைவில் அங்கே தொழில்கள் தொடங்கப்பட வேண்டுமென்ற எண்ணத்தோடு பல்முனை சிறப்பு பொருளாதார மையம் என்பதற்குப் பதிலாக, ஏழு வகையான வெவ்வேறு தொழில் களை தனித்தனியாக அங்கே தொடங்கிடும் வகையில் 121 எக்டேர் பரப்பளவில் பொறியியல் தொழிற்சாலைகளும், 110 எக்டேர் பரப்பள வில் மோட்டார் வாகன உதிரிபாகங்கள் தயாரிக்கும் தொழிற்சாலை களும், 107 எக்டேர் பரப்பளவில் மின் சாதனங்கள் மற்றும் வன்பொருள் பாகங்களைத் தயாரிக்கும் தொழிற்சாலைகளும், 185 எக்டேர் பரப்பளவில் மருந்து பொருட்களைத் தயாரிக்கும் தொழிற் சாலைகளும், 70 எக்டேர் பரப்பளவில் பொருட்களை எடுத்துச் செல் வதற்கான வசதிகளை அமைக்கும் தொழிற்சாலைகளும், 10 எக்டேர் பரப்பளவில் தகவல் தொழில் நுட்பத் தொழிற்சாலைகளும், 13 எக்டேர் பரப்பளவில் உயிர்தொழில் நுட்பத் தொழிற்சாலைகளும் தொடங்குவதென்று முடிவெடுக்கப்பட்டுள்ளது.

*****

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.